## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| M.C.O.P. No. 31/2019 | Date :01.07.2022. | PW1 |
| Name: அருள்சாமி | S/o. திரவியம்பிள்ளை | |
| Evidence Recorded Time: 01.05 P.M. to 01.15 P.M. | | |

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்து சமயம் என் மகன் இறக்கும்போது அவருக்கு 23 வயது. என் மகன் வெல்டிங் வேலை செய்து வந்தான். விபயத்து சமயத்தில் என் மகனுக்கு வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை. என் மகன் அச்சங்காட்டிலிருந்து மாசிலாபாளையம் வரும்போது ராயல் கல்லூரி எதிர்புறம் இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது மகேந்திரா பள்ளி வேன் மோதி இந்த விபத்து ஏற்பட்டது. எனக்கு சொந்தமாக விவசாய நிலம் இல்லை. என் மகன்தான் சம்பாதித்து கொடுத்தான். நான் கூலி வேலை செய்து வருகிறேன். மகேந்திரா வாகனத்தின் ஓட்டுநரை எனக்கு தெரியும்., உறவினர் இல்லை. 1-ம் எதிர்மனுதாரர் டிரைவருக்கு பள்ளி வாகனத்தை ஓட்டுவதற்குண்டான பேஜ் இருந்ததா என்றால் தெரியாது. 1-ம் எதிர்மனுதாரர் டிரைவர் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை எதுவும் தாக்கல் செய்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது. வண்டி ஓட்டுநர் மீது ஆர்.டி.ஓ அலுவலகத்தில் பேஜ் இல்லாததால் அபராதம் ரூ.1000/- விதிக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. விபத்து சமயத்தில் என் மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் அவருடைய நண்பரின் வாகனம் ஆகும். என் மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், அந்த வண்டியின் இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் என் மகன் மாதம் ரூ.24,000/- வரை சம்பாதித்து வந்தார். அதுபோக மற்ற அலவன்சும் அவருக்கு ரூ.4,000/- வரை கிடைத்தது. என் மகன் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளான். விபத்து சமயத்தில் என் மகன் வெல்டிங் வேலை செய்யவில்லை என்றாலும், மாதம் ரூ.24000/- சம்பாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், சாலை விதிகளை பற்றிய சரியான புரிதலும் இல்லாமல் நடந்த விபத்திற்கு என் மகனின் கவனக்குறைவு தான் காரணம் என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கும் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் பாலிசி விதிமுறைகளை மீறி பள்ளி வாகனத்தை இயக்கியதாலும் 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை

என்றாலும் சரியல்ல. நான் கோரிய நஷ்டஈடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. முறையான தரப்பினர்களை பார்டியாக சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>**

விபத்து சமயத்தில் மேற்படி பள்ளி வேன் ஆனது பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்வதற்காக காலியாக வந்தது.

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.